**13.03.2024**

***OS 450/2019***

**பி.வா.சா.1 தமிழ்செல்வி**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

என்னுடைய எதிர்வழக்குரையில் பூசாரிகோனாருக்கு 1976 உயில் மூலம் பாகமாக கிடைத்துள்ளது என்று சொல்லியுள்ள நிலையில் என்னுடைய நிருபணவாக்கு மூலத்தில் 1960ல் வாய்கரலாக கிடைத்தது என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் எது உண்மை என்றால் இரண்டுமே உண்மைதான். மேற்படி என்னுடைய இரண்டு நிலைப்பாடுமே தவறுதான் என்றால் சரியல்ல. பூசாரிகோனாரும், அவரது குடும்பத்தினரும் தாவா சொத்தின் உரிமையாளர்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. பூசாரிகோனாரும், அழகம்மாளும் 1960ல் எழுதிக்கொண்ட உழவடை ஒப்பந்தத்தின் மூலம் உழவடை உரிமைதான் தாவா சொத்தில் உள்ளது என்றும், வேறு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பூசாரிகோனார் மேற்படி உழவடை உரிமையை கைவிட்டு சர்வலிங்கோனாருக்கோ, அழகம்மாளுக்கோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவர் உழவடையே செய்யவில்லை. பூசாரிகோனாருக்கு பிறகு அம்மாபிள்ளை உழவடை முறையை வாதிகளிடம் ஒப்படைத்துள்ளாரா என்றால் அவர் உழவடையே செய்யவில்லை. எனவே இந்த கேள்வி எழாது. உழவடை பாத்தியத்தில் பூசாரிகோனாரும் அவருக்கு பின் அவரது மனைவியும் இருந்து வந்து, அதை மறைத்து தாவா சொத்தினை பூர்வீக சொத்தாக காண்பித்து எனக்கும், 2ம் பிரதிவாதிக்கும் செய்து தந்த கிரையம் மோசடியானது என்றால் சரியல்ல. அம்மாபிள்ளை அம்மாளுக்கே தாவா சொத்தில் பாத்தியம் இல்லாத நிலையில் அவரிடமிருந்து நான் சொத்தை வாங்கியுள்ள நிலையில் எனக்கும், 2ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்தில் எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும், 2ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்தில் எவ்வித பாத்தியமும் இல்லாத நிலையில் 3ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்தில் எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்தில் சட்டப்படியான பாத்தியமோ, அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியும், 3ம் பிரதிவாதியும் சாட்சி சொல்லக்கூடிய நிலைமையில் உள்ளார்கள் என்றால் 2ம் பிரதிவாதி தன்னுடைய வாழ்வின் இறுதிகட்டத்தில் இருக்கிறார். 2ம் பிரதிவாதியின் உடல்நிலை குறித்து மருத்துவ சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதை போடவில்லை, அதை தாக்கல் செய்ய வேண்டும் என்பது பற்றி தெரியவில்லை. நான் 1989ல் 60-சென்டைதான் கிரையம் வாங்கினேன். நான் 1990ல் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டேன். 3ம் பிரதிவாதி 2019ல்

கிரையம் வாங்கியுள்ளார். நான் சொத்தை விற்ற பிறகு யாருடைய அனுபவத்தில் உள்ளது, எவ்வாறு அனுபவம் செய்து வருகிறார்கள் என்ற விவரங்கள் தெரிய வாய்ப்பில்லை என்றால் எனது சித்தப்பா இந்த விவரத்தை என்னிடம் தெரிவித்தார். ராதாகிருஷ்ணன் தற்போது அனுபவித்து வருவதாக தெரிவித்தார். நான் சொத்தை விற்ற பிறகு சொத்தின் அனுபவத்தை பற்றி சொல்வதற்கும், 2ம்பிரதிவாதி விற்றதையோ, 3ம் பிரதிவாதியின் அனுபவத்தையோ சொல்வதற்கு எனக்கு எவ்வித அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. அதைபோல 2, 3 பிரதிவாதிகள் ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி உடல்நிலை சரியில்லாமல் இருப்பதால் நான் தாக்கல் செய்துள்ளேன். 2ம் பிரதிவாதி உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 1989ல் கிரையம் பெற்றுவிட்டு 1988ல் கிஸ்தி ரசீது செலுத்தப்பட்டுள்ளது என்றால் அது அவருடைய தவறாக இருக்கலாம். அது பற்றி எனக்குத் தெரியாது. நான் கிஸ்தி ரசீதை வழக்கிற்காக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.11 முதல் 16 வரையுள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பிந்தைய ஆவணங்கள் என்றும், அதற்கு எவ்வித முக்கியத்துவமும் கொடுக்க கூடாது என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் வழக்கிற்கு பிந்தைய ஆவணங்கள் என்றால் சரியல்ல. வழக்கு போடுவதற்கு சில மாதங்களுக்கு முன்புதான் நான் பெற்ற கிரையங்கள் வாதிக்கு தெரிய வந்தது என்றால் அது பொய். நான் வாங்கிய பிறகு வாதிகளிடம் அவர்கள் தாவா சொத்தை குறித்து எவ்வித பிரச்சினையும் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய கிரையம் தெரிந்திருந்தால் அவர்கள் அப்போதே தாவா செய்திருப்பார்கள் என்றும், அதனால்தான் எவ்வித தாவாவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் பக்கத்து நிலத்துக்காரர்கள். வாதிக்கு நான் பெற்ற கிரையங்கள் தெரியாது என்றால் சரியல்ல. சத்திரப்பட்டி கிராமத்தில் 2ம் பிரதிவாதி செல்வாக்குமிக்க நபர் என்றால் சரிதான். அவர் பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்தார். அவரின் அண்ணன் மகள்தான் நான். என்னுடைய தம்பி பெயர் மதிவாணன். 1980லிருந்து 2000 வரை மதிவாணன்தான் சத்திரப்பட்டி ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார். மதிவாணனுக்கு முன்பு எனது சித்தப்பா ஊராட்சி தலைவராக இருந்தார். அதற்கு முன்பாக எனது அப்பா ஊராட்சி தலைவராக இருந்தார். எனது சித்தப்பாவிற்கு பிறகு மதிவாணனின் மனைவி ஊராட்சி தலைவராக இருந்தார். எங்களின் குடும்பத்தில் தொடர்ச்சியாக ஊராட்சி தலைவராக இருந்ததால் எங்களது செல்வாக்கை பயன்படுத்தி வருவாய்

துறையில் பட்டா முதலிய ஆவணங்களை மாற்றம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பூசாரிகோனார், அம்மாபிள்ளை பெயரில் பட்டா, கிஸ்தி முதலிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியாக நினைவில்லை. அவர்கள் பெயரில் எவ்வித பட்டாவோ, கிஸ்தியோ மாறவில்லை என்றும், அவர்கள் உரிமையாளர்கள் இல்லாததால் அவர்கள் பெயரில் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எவ்வித பாத்தியமும் இல்லாமல் அனுபவம் மட்டும் கோரியிருப்பது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்கள் அனைத்தும் வழக்கு தாக்கல் செய்தபின்னிட்டுதான் வாதிக்கு தெரிய வந்தது என்றால் சரியல்ல. உரிமை இல்லாத நபரிடம் கிரையம் வாங்கிவிட்டு அனுபவம் மற்றும் எதிரிடை அனுபவ பாத்தியம் கோரியிருப்பது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. கிரையபத்திரப்படி பாத்தியம் கோரிவிட்டு, எதிரிடை அனுபவ பாத்தியம் கோரியிருப்பது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. காலவரையறை சட்டத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. பூசாரிகோனாரின் உடல் உழைப்பின் மூலமாகத்தான் தாவா சொத்து வாங்கப்பட்டது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. சட்டப்படி இல்லாத சுவாதீனத்தை வாதி வழக்கறிஞர் அறிவிப்பு மூலம் அனுப்பி ரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிக்குதான் பாத்தியப்பட்டது என்றும், அதில் எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 3பேரும் வாதிக்கு கடந்த கால நஷ்டி தொகை செலுத்த கடமைபட்டவர் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி வாதிக்கு சொத்தை ஒப்படைக்கும் வரை எதிர்கால நஷ்டி தொகை செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 1960ல் வாய்கரால் பாகத்தை நிருபணம் செய்வதற்கு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த காலத்தில் இருந்தவர்கள் தற்போது இல்லை. ஆவணங்கள் ஏதும் இல்லை. வாதி வழக்குரையில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 2 எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் தவறு என்றால் சரியல்ல.

ஒப்பம்-S.கணேசன்
சார்பு நீதிபதி
மேலூர்